புதுக்கவிதை என்ருெரு பிள்ளையார் பிடித்தோம் !

கவிதை

கவிஞனின் நெஞ்சத்தின்
யதார்த்தத்தில்,
(நி) தர்சனத்தில்,
யெளவனத்தில்,
உதித்த
ஒரு மலர்.

ஏதாவது புரிகிறதா? இல்லை, ஆகவே இதனை ஒரு 'புதுகவிதை' என்று ஏற்றுக்கொள்ளலாம். இன்றைய பிரபல 'சந்தைப் பத்திரிகைகளிலும்' கல்லூரிச் சஞ்சிகைகளிலும் புதுக்கவிதை என்று ஏராளமான மேதாவிகள் எழுதுவதைப் பார்க்கும் போதும், அதைப் படித்து, புளகாங்கிதமடைந்து, அதைப்போல் தாங்களும் எழுத நினைக்கும், தங்களை intellectuals என்று நினைத்துக் கொண்டிருக்கும், ரசிக மந்தையை நோக்கும் போதும் மேலே உள்ள கண்ருவியை ஒரு புதுக்கவிதை என்பதில் தவறில்லை என்று தான் தோன்றுகிறது. "வார்த்தைகள் நடந்தால் வசனம், நடனமாடினுல் கவிதை" என்று யாரோ சொன்னுனும். வசனத்திலும் மோசமான வசனங்களைத் துண்டு துண்டாகப் பிய்த்துப்போட்டு விட்டுக் கவிதை என்கிருர்களே.

பாரதி 'வசனகவிதை' என்று ஒரு பரிசோதனையைத் தொடக்க, பிச்சமூர்த்தியும் பின்வந்தோரும் பழைய கவிதை முறையின் பண்டித்தனத்தை விரும்பாமல் தொடர்ந்தனர். பார்த்தார்கள் மற்றவர்கள்! "அட, இவ்வளவு சுலபமாதக் கவிதை யெழுதி விடலாமென்ருல் நாங்களும் ஏன் எழுதக்கூடாது?" என்று புறப்பட்டார்கள். பணக்காரனுவேண்டுமெனில் குறுக்குவழி மத்திய கிழக்கு; இலக்கிய வாதியாக வேண்டுமெனில் குறுக்குவழி புதுகவிதை என்று நினைத்தார்களோ இல்லையோ தமிழைப் பிடித்தது ஏழரைச்சனி.

சந்தைப்பத்திரிகைகளுக்கு அனுப்புவதற்கப் 'புதுக்கவிதை' தயாரிக்க recipe சொல்லித்தரவா? நிஷ்டை, யெளவனம், புஷ்பித்து, ஜீவன், உணர்ச்சி, சிருங்காரம் இப்படி அர்த்தம் தெரியாத சொல்களாகப் பார்த்துத் தனித்தனிக் கடதாசித் துண்டுகளில் எழுதிச் சுருட்டி ஒரு தொப்பிக்குள் போடுங்கள். ஆச்சரியக்குறிகள், கேள்விக்குறிகள் — சுவைக்குத் தக்கபடி தேவையான அளவு,

ஆயிற்று? தொப்பிக்கள் கையை விட்டு வரும் சொல்களை ஒரு தாளில் எழுதுங்கள். ஒரு வரியில் இரண்டு மூன்று சொல்களுக்கு மேல் எழுத வேண்டாம். கண்ணை மூடிக்கொண்டு ஒரு தலையங்கம் போடுங்கள். சரி, சுடச்சுடப் "புதுக்கவிதை" தயார். பத்திரிகைக்கு அனுப்பினால் படித்துவிட்டு உங்கள் முதுகு சொறிந்து விட வாசகக்கூட்டம் ஒன்று இருக்கவே இருக்கிறது.

'சந்தைப் புதுக்கவிதைகள்' பற்பல வண்ணங்களில் வருகின்றன ஒரு தலையங்கத்தை? போட்டுவிட்டு நாலு வரி எழுதி முடிப்பார்கள் தலைப்பின் பொருளை கவித்துவமாக ("கவித்துவம்? தற்கு recipe என்ன" ஒன்று கேட்காதீர்கள்) விளக்குகிறோம் என்பது எழுதியவரின் எண்ணம்.

உதாரணத்துக்கு,

பூகம்பம்

வேகமாய் ஓடுகின்ற
காலச்சக்கரத்தின்
சுழற்சியில்
கண்ணிமைக்கும்
சிலநேரம் தோன்றி
மறைகின்ற சிறிய
'விபத்து' (தினகரன்)

கவிதையழகு பொங்கி வழிகிறது!? விபத்து என்று எழுதாமல் 'விபத்து' என்று போடுவதும் 'புதுக்கவிதை விற்பன்னர்'களுக்கு மிகவும் பிடிக்கும். 'Inverted Commas' போட்டதன் effect என்னவென்று பார்க்கப்போனால் பூஜ்யம்!

இன்னொரு வகை ஏராளமாக உருவக அணியை (அதை உருவக அனி என்பதற்கு மன்னிப்பீர்களாக) உலவ விடுவது. உருவகப்படுத்தல் எவ்வளவுக்கெவ்வளவு பைத்தியக்காரத் தனமாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு பிரசுரம் நிச்சயம் எனலாம்.

ஏன்?

அந்தகார
இருளின்
ஆக்கிரமிப்புச்
சூறுவளியில்
அன்று பிறந்த
ஊமைக் குழந்தைகளின்
பனிமுகங்களை

பன்னீர்ப்பாதங்கள்
இன்று சில
இரக்கமற்ற அரவங்கள்
ஏனோ .... ஏனோ ....
திண்டிப்பார்க்கின்றன. (தினகரன்)

அந்தகார இருள் என்பது ஒரு உருவகமாம். அந்தகாரத்திற்கும் இருளிற்கும் அர்த்தத்தில் ஏதும் வித்தியாகம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பனிமுகம், பன்னீர்ப்பாதம்? விவஸ்தையில்லாத சொற்சேர்க்கை. பன்னீர்ப்பாதங்கள் என்ற சொல்களை நீக்கிவிட்டுப் படித்துப்பாருங்கள். கருத்து (அப்படி ஒன்று இந்தக்கவிதையில் இருந்தால்) வித்தியாசப் படுவதாகத் தெரியவில்லை; வேண்டாத விருந்தாளியாக நுழைந்த சொற்றொடர்.

பிரபல 'சந்தைக்கவிஞர்' களெல்லாம் தங்களுக்கு முற்றிலும் பரிச்சயமில்லாத சொல்களைக் கவிதைகளுக்குள் புகுத்துவது கவிதைகளின் தரத்தை உயர்த்துமென்று நினைக்கின்றனர். உண்மையிலேயே இந்தக்கவிதைகளைப் பிரசுரிப்பவர்கள் படித்து ரசிப்பவர்களும் 'புரியாமை' என்பதையே தரத்தின் அளவுகோலாக நோக்கினார்கள். கவிஞருக்குப் புரிவதில்லை; பிரசுரிப்பவருக்கும் புரிவதில்லை; வாசகருக்கும் புரிவதில்லை புதுக்கவிதை என்ற ஊடகத்தைப் புகுத்தியதே கவிஞனுக்கும் வாசகனுக்கும் இடையிலுள்ள பாரம்பரியத் தடைகளைக் களைந்தெறியத்தான். ஆனால் எங்கள் 'புதுக்கவிஞர்' திலகங்கள் சொல்வதற்கு ஒரு message தேட வக்கில்லாமல் மனம் போனபடி வார்த்தை அலங்காரம் செய்துவிட, படிப்பவரும் மிரண்டு போய்த் தப்பித்தால் போதும் என்று கவிதையில் பெரிய தத்துவங்கள் பொதிந்திருப்பதாக ஓகோவென்று பாராட்ட அமர்க்களந்தான்.

அதிகப்பரிச்சயமில்லாத சொற்களில் கவிதை புனைவது ஆழந்தெரியாத குளத்தில் காலை விடுவது போலத்தான் இதைப் பாருங்கள்.

ஓ! ....

[ஓ ....! என்பதும் அவர்களுக்குப் பிடித்தமான ஒன்று பொருத்தமேயில்லாத இடங்களில் உபயோகிப்பார்கள். ஓ! .... .என்றால் என்னவென்று தெரியவில்லை.]

வெண்புறுக்கூட்டங்களே
புத்தாடை புனைந்து
புனிதத்துவப்
பூப்பெய்யும்

புனித ஆத்மாக்கள் நீங்கள்
இனம், நிறம், பால்
வேற்றுமை உருபுகளை
களைந்து ....
(சிந்தாமணி வார இதழ்)

என்று தொடர்கிறது கவிதை

வேற்றுமை உருபு என்பது வேற்றுமைக்கு ஒத்த கருத்துள்ள சொல் என்று நினைத்துக்கொண்டு எழுதியிருக்கிறார். "உருபு என்றால் என்னவென்று தெரியாதவனுக்கெல்லாம் என்ன கவிதை' என்று நான் கேட்கவில்லை. தெரியாதவற்றை சிவனேயென்று விட்டிருக்கலாம். பிடித்துக் கழுத்தை நெரித்துக் கொல்ல வேண்டுமா? மீதிக்கவிதை விமரிசிக்கத் தகுதியற்றது. ஒன்டைய திறமைக்கு அப்பாற்பட்டது!

மெய்யான புதுக்கவிஞர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். மழைக்காளான் போல் முளைத்த எண்ணில்லாப் போலிகளாலும் அவர்களுக்கு அங்கீகாரம் கொடுத்துப் போஷித்த சந்தைப்பத்திரிகைகளாலும் இவர்கள் மறைக்கப்பட்டுவிட்டனர். என்றாலும் நெஞ்சைத் தொட்டும், புத்திசாலித்தனமான கவிதைகள், பிடிவாதக் குழந்தைகள் போல் இன்னும் வெளிவரத்தான் செய்கின்றன. இதனைப் பாருங்கள்.

மௌன நாடகம்

நான்
நெருங்கி வரும் போது
மருண்டு போகிறாய்
விலகிப்போகும் போது
நெருங்கி வருகிறாய்
உனக்கு
சிவப்பு நிறமுமில்லை
எடுப்பான மார்புமில்லை
இருப்பினும்
உன்
சின்ன விழி மலரிதழில்
ததும்பி நிற்கும் நீர்த்துளியில்
நான்
கரைந்து போகிறேன்.

— பாரதிநாடன்.

ஒரு சாதாரண ஆணுக்கு ஒரு சாதாரணப் பெண்ணிடம் தோன்றிய காதலை அழகாக, வாசகனுக்குப் பழக்கமான ஒன்றைச் சொல்வதுபோல் சொல்கிறது இந்தக்கவிதை. நீங்கள் முரண்படத்தான் போகிறேன் என்றால் தான் ஆட்சேபிக்கவில்லை.

ஆனால் Sparkling Wit உடன் புனையப்பட்ட இந்தக்கவிதைகள் முரண்பாட்டை அவசியமற்றதாக்குகின்றன:

பாதை

இது
நடப்பதற்கு
மட்டுமல்ல
மைல்
கற்கள்
நடுவதற்காகவும்
கூட — ஸ்ரீ

இந்தக்கவிதையிலும் சொற்களைப் பிய்த்துப் போட்ட விதத்தை (முக்கியமாக மைல் கற்கள்) நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

இன்னொன்று, தமிழ் நாட்டின் தலைநகரைச் சென்னையிலிருந்து மாற்றமுயற்சித்ததைக் கேலி செய்யும் கவிதை,

தலைநகர் மாறினால்

காவேரித் தண்ணீர்
சென்னைக்குப் போகாது.
ஆனால்,
காவேரி
கூவம் ஆகும். (கணையாழி)

கவிஞர் வெறும் ஆறுகளைப்பற்றி மாத்திரம் சொல்லவில்லை என்பது தெளிவு.

போலிப்புதுக்கவிஞர்களின் 'உடற்' பலம் வரவர அதிகரித்துக் கொண்டே போகிறது. தாங்களும் சங்கங்கள் அமைத்து இலக்கியக் (!) கூட்டங்கள் கூட்டித் தடபுடல் படுத்துகிறார்கள். பத்திரிகைகளிலும் கூட்டங்களிலும் பரஸ்பரம் முதுகு சொறிந்துகொள்கிறார்கள். ஐம்பதுகள், அறுபதுகள் (fifties, sixtiex) என்று எழுதுவதைப் பார்த்துவிட்டு ஒரு புதுக்கவிஞர் இன்னொரு புதுக்கவிஞரை "... எழுபத்தேழுகளிலிருந்தே எழுதிவருகிறார்" என்று அறிமுகப்படுத்தினார். அந்த அளவிற்கு அறியாமையும் போலித்தனமும் பொங்கி வழிகின்றன:

இந்த நிலையில் உண்மையான இலக்கிய நலன் விரும்பிகள் தங்களுக்குள் சிண்டைப்பிடித்துக் கொள்வதை விட்டுவிட்டு தரைக்கு வந்து சேர வேண்டும். "ஜானகிராமனின் எந்தக் கதை சிறந்தது என்று ஆராய்வதை விட மணியனும் அகிலனும் சாவியும் உண்டாக்கி வைத்திருக்கும் அபாயங்களை எதிர்த்தும் போராடுவதுதான் இலக்கிய

வாதியின் தலையான கடமையாக இருக்க வேண்டும்" என்று யாரோ சொன்னார். புதுக்கவிதைக்கும் இது பொருந்தும். சிறுபத்திரிகைகள் படிக்கும் வாய்ப்பில்லாத இளைஞர்கள், யுவதிகள் சந்தைப் பத்திரிகைகளில் வருவதுதான் புதுக்கவிதை என்று நினைத்து, அதைப் போல் தாங்களும் எழுதப் புறப்பட்டுத் தங்கள் சத்தியை, திறனைப் பாழடித்துக் கொள்ளவதைப் பார்க்கும் போது "தமிழினி மெல்லச் சாகும்" என்று தான் தோன்றுகிறது.

ரசிகர்களுக்கு நானொன்று சொல்லுவேன், எது உங்களுக்கு நன்கு புரிகிறதோ அதுதான் சிறந்த இலக்கியம். வார்த்தை ஜாலங்கள் நிரம்பிய ஒரு கவிதை உங்களுக்கு புரியவில்லை என்றால் அது கவிதையல்ல என்பதுதான் அர்த்தம். கலை உங்களுக்காகத்தான்.

புதுக்கவிதையைப் பற்றி 'அலை'யில் பேராசிரியர் சிவசேகரம் அவர்கள் 'புதிய போத்தலில் பழைய சாக்கடை நீர்' என்றார். பழையது பன்னீராக இல்லாவிட்டாலும் பச்சைத் தண்ணீராகவாவது இருந்தது. புதுக்கவிதை இப்படி இம்சைப்படுத்தப் படுவது பற்றி ஜாம்பவான்கள் எல்லோரும் சிறு பத்திரிகைகளில் 'லபோ லபோ' வென்று அடித்துக் கொள்வதை விட்டுவிட்டு (அவற்றைப் படிப்பவர்கள் பிரச்சனையை எப்போதோ உணர்ந்து ஒரு பாட்டம் அழுது தீர்த்தாயிற்று). தினகரனிலும் வீரகேசரியிலும் (முடியுமானால் மித்திரனிலும்) அடித்துக்கொள்ள வேண்டும்.

"சரி, இவ்வளவும் எழுதியாயிற்று, இந்த இதழிலிருக்கும் மற்றப் "புதுக்கவிதைகள்..........?" என்கிறீர்களா? அண்ணன் கொள்ளைக்காரனும் தம்பி பொலிஸ்காரனும் வரும் தமிழ்ப் படங்களெல்லாவற்றுக்கும் குடும்ப சமேதராகச் சென்று பார்த்து ரசிக்கவில்லையா அதைப்போல் இதையும் கண்டு கொள்ளாமல் விட்டுவிடுங்கள்.

ந. அசோகன்
13 'சி' (கணிதம்)